## 5.22 26.1.2007 அன்று சென்னையில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் சார்பாக அலங்கார ஊர்தி – செலவினத் தொகை விடுவித்தல்

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (எம்சி) துறை

அரசாணை (வாலாயம்) எண். 82 நாள் : 26.3.2007

படிக்க :

1. அரசு ஆணை (நிலை) எண். 003, தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தி (பொருட்காட்சி)த் துறை, நாள் 9.1.2007
2. நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம், சென்னை க.எண். 004/F1/06, நாள் 23.1.2007

**ஆணை**

படிக்கப்பட்டவை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையில் 26.1.2007 அன்று சென்னையில் நடைபெற்ற குடியரசு தின விழாவில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகம் சார்பாக அலங்கார ஊர்தி பங்கேற்க அனுமதியும், அதற்கான செலவினத் தொகை ரூ. 79,860/–க்கு ஒப்பளிப்பும் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. படிக்கப்பட்டவை இரண்டில் குறிப்பிடப்பட்டுள்ள கடிதத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழக நிர்வாக இயக்குநர் மேலே பத்தி ஒன்றில் ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட ரூ. 79,860/–ஐ (ரூபாய் எழுபத்தி ஒன்பதாயிரத்து எண்ணூற்று அறுபது மட்டும்) விடுவித்து ஆணை பிறப்பிக்க வேண்டியுள்ளார்.

3. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழக நிர்வாக இயக்குநர் கருத்துருவினை ஆய்வு செய்து 26.1.2007 நாளன்று சென்னையில் நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகம் சார்பாக ஊர்தி பங்கேற்ற நிலையில் படிக்கப்பட்டவை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையில் அனுமதிக்கப்பட்டுள்ள தொகை ரூ. 79,860/– (ரூபாய் எழுபத்தி ஒன்பதாயிரத்து எண்ணூற்று அறுபது மட்டும்) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழக நிர்வாக இயக்குநருக்கு கீழ்க்கண்ட தலைப்பின்கீழ் விடுவித்து ஆணை வெளியிடப்படுகிறது.

" 2235 - Social Security and Welfare. 02. Social Security. 103. Women's Welfare Schemes in the Tenth Five Year Plan - II State Plan - LC Tamil Nadu Women's Development Project (Mahalir Thittam) - 11. Subsidies 02. General Subsidy."

(DPC 2235 02 103 LC 1123)

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்புச் செய்யப்பட்டுள்ள தொகைக்கான கூடுதல் நிதியொதுக்கம் இறுதி திருத்திய மதிப்பீடு 2006–07–ல் சேர்க்கப்பட்டுள்ளது. இத்தொகையை பணமாக வழங்கிடாமல் 2220.செய்தி, விளம்பரம் 60. ஏனையவை 106. நேரிடவிளம்பரம் திட்டம் சேராதது. AH. பொருட்காட்சி 08. விளம்பரமும் பிரச்சாரமும் 02. பொருட்காட்சி (து.தொ.கு. எண். 2220.60.1.06 AH –0822) என்னும் கணக்குத் தலைப்பிற்கு ஏற்கெனவே பெறப்பட்ட முன்பணத்திற்காக நேர்செய்யும்படியும் ஆணையிடப்படுகிறது. இதற்கான சரிகட்டல்பட்டி (Adjustment Bill) தயார்செய்து செலவினத்தை நேர் செய்யும்படியும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக்கழகம், சென்னை–32 அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

5. இந்த ஆணை நிதித் துறையின் ஒப்புதலுடன், அதன் அ.சா.எண். 17285/ Finance (R D)/2007, நாள் 23.3.2007–ன்படி வெளியிடப்டுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்